සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
Department of Samurdhi Development
ප්‍රාථමික කර්මාන්ත සහ සමාජ සවිබලගැන්වීම් අමාත්‍යාංශය
ஆரம்ப கைத்தொழில் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு
MINISTRY OF PRIMARY INDUSTRIES AND SOCIAL EMPOWERMENT

| | | |
|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல<br>My No DSD/HO/05/MF/சுற்றுநிருபம் | ඔබේ අංකය<br>உமது இல<br>Your No ........................ | දිනය<br>திகதி<br>Date 2019.04.17 |

**சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சுற்றுநிருப இலக்கம் - 2019/04**

சகல சமுர்த்தி வங்கி / வங்கிச்சங்க முகாமையாளர்களுக்கும்.

## வருமானமீட்டும் கருத்திட்டங்கள் 50,000 வேலைத்திட்டத்தின் கீழ் சமுர்த்தி பயனுகரிகள் உட்பட குறைந்த வருமானம் பெறுவோரை பலப்படுத்துவதற்கான "தனாபிமாணி" கடன் திட்டத்தினை அறிமுகம் செய்தல்

**அறிமுகம் (Introduction) :-**

சமுர்த்தி வங்கி வேலைத்திட்டத்தின் பிரதான நோக்கத்தினை அடைந்து கொள்வதற்கான பிரிவுகளாக குறுநிதி மற்றும் சிறு தொழில் முயற்சிப்பிரிவுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அப்பிரிவுகளினூடாக இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி, பிரதேச அபிவிருத்தி, வேலைவாய்ப்பு, வறுமைக் குறைப்பு, தேசிய வளங்களை பாவனைக்குட்படுத்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு அவற்றினூடாக அன்னியச்செலாவணியை பெற்றுக்கொள்வதற்கும் மற்றும் சமுர்த்தி வங்கி வலையமைப்பின் நிலைபேற்றுத்தன்மையினை உறுதிப்படுத்துவதக்கும் இப்பிரிவுகள் பிரதானமாக அமைகின்றன எனக்கூற முடியும்.

இவ் அரிய வாய்ப்பினை கவனத்தில் கொண்டு அடிப்படைக் கைத்தொழில் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் வழிகாட்டலுக்கு அமைய சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தினால் சமுர்த்தி பயனுகரிகள் உட்பட குறைந்த வருமானம் பெறுவோரின் பொருளாதார நிலைமையினை பலப்படுத்துவதற்கு கீழ்குறிப்பிடப்படும் துறைகளில் வருமானமீட்டும் 50000 கருத்திட்டங்களை அறிமுகம் செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

- விவசாயம் மற்றும் அதனோடு இணைந்த பெறுமதிசேர் கைத்தொழில்கள்
- மிருகவளர்ப்பு மற்றும் அதனோடு இணைந்த பெறுமதிசேர் கைத்தொழில்கள்
- மீன்பிடி நடவடிக்கை மற்றும் அது தொடர்பான உற்பத்திகள்
- சிறு கைத்தொழில்கள்
- தொழில் பயிற்சி மற்றும் புதிய நுட்பங்கள் சார்ந்த உற்பத்திகள்
- ஏற்றுமதி சார் உற்பத்திகள்
- இறக்குமதி பதிலீட்டுப் பொருட்கள் சார்பான உற்பத்திகள்
- சந்தைப்படுத்தல் மற்றும் சேவைகள்

1වන අදියර,4 වන මහල, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල. /1ம் கட்டம், 4 வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல /1st Step, 4 th floor, Sethsiripaya Battaramulla

| | අධ්‍යක්ෂ ජනරාල්<br>பணிப்பாளர் தலைமையதிபதி<br>Director General | අධ්‍යක්ෂ (පාලන හා ආයතන)<br>பணிப்பாளர் ( நிர்வாகம்/தாபனம்)<br>Director (Admin & Establishment) | ප්‍රධාන ගණකාධිකාරී<br>பிரதான கணக்காளர்<br>Chief Accountant | අධ්‍යක්ෂ (ක්ෂුද්‍ර මූල්‍ය)<br>பணிப்பாளர் (குறு நிதி )<br>Director ( Micro Finance) | කාර්යාලය<br>அலுவலகம்<br>Office |
|---|---|---|---|---|---|
| Tel- | 011-2871672/2872202 | 011-2873799 | 011-2869742 | 011-2889003 | 0112872202 |
| Fax - | 011-2889002 | 011-2873996 | 011-2869742 | 011-2887469 | |
| E-mail- | dg@samurdhi.gov.lk | diradmin@samurdhi.gov.lk | finance@samurdhi.gov.lk | | |
| | | Hot Line :0112-889007 | | Hot Line:0112-885582 | Hot Line: 011- 2887722 |

மேற்படி துறைகளில் தற்போது ஈடுபட்டுள்ள அல்லது புதிதாக கருத்திட்டத்தினை ஆரம்பிக்கவுள்ள எங்களது இலக்கிடப்பட்ட குழுவினருக்கு நிதிவளம் உட்பட தொழில்நுட்ப, தொழில் முயற்சி தொடர்பான அறிவினை வழங்குவதற்கு சமுர்த்தி வங்கி வலையமைப்பு முன்னணியில் உள்ளது.

வருமானமீட்டும் 50000 கருத்திட்டங்களுக்கு சமுர்த்தி வங்கிகளினூடாக கடன்வசதியினை வழங்கும் பொருட்டு **"சமுர்த்தி தனாபிமாணி"** கடன் திட்டத்தினை அறிமுகம் செய்வதுடன் இவ் ஆலோசனைகளின் பிரகாரம் கடன் வசதியினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் இத்தால் தங்களுக்கு தெரியப்படுத்துகின்றேன்.

02. **குறிக்கோள்கள் :- (Goals)**

I. சமுர்த்தி பயனுகரிகள் உட்பட குறைந்த வருமானம் பெறுவோரை விசேட வருமானமீட்டும் 50000 கருத்திட்டங்கள் ஊடாக பொருளாதார ரீதியாக பலப்படுத்தி அவர்களின் மாத வருமானத்தினை ரூபா 30000/= வரை உயர்த்துதல்

II. மூன்று வருடத்தினுள் ரூபா 180 பில்லியன் தொகையினை தேசிய வருமானத்துடன் ஒன்று சேர்த்தல்

III. இலக்கிடப்பட்ட மக்களை சுயபலத்தினால் மேன்மையடையச் செய்து தங்கியிருக்கும் மனப்பாங்கினை இல்லாதொழித்தல்.

03. **குறிக்கோள்களின் தன்மை ( Nature of Object)**

1. எதிர்கால வியாபாரத் திட்டமிடலுடன் காணப்படும் சமுர்த்தி பயனுகரிகள் / குறைந்த வருமானம் பெறுவோரின் தொழில் முயற்சிக்கான மூலதனத் தேவையினை நிறைவு செய்தல்.
2. பெறுமதிசேர் (Value Chain) செயற்பாட்டின் ஊடாக ஆரம்ப உற்பத்திற்கு கூடிய பெறுமதியினை பெற்றுக்கொள்வதற்கு ஏற்றவிதத்தில் முயற்சியாளர்களை ஊக்கப்படுத்தல்.
3. கூடுதல் வருமானத்தை தரக்கூடியதும், நிரந்தர மற்றும் உற்பத்தி திறன் மிக்கதுமான கருத்திட்டங்களை முன்னேற்றுதல்.
4. தொழில் வாய்ப்புக்களை அதிகரிப்பதற்கான வசதிகளை உருவாக்குதல்.
5. நுகர்ப்புற மற்றும் கிராமப்புற வருமான ஏற்றத்தாழ்வுளை நீக்கி வறுமையினை குறைப்பதற்கான உபாய மார்க்கமாக முதலீடுகளை பரவலாக்குவதற்கான சூழலை உருவாக்கதல்.
6. பிரதேச ரீதியான சந்தை வாய்ப்புக்களை பரவலாக்கி இறக்குமதியினை குறைத்து / ஏற்றுமதிசார் பொருட்கள் சேவை வழங்குனர்களை உருவாக்குவதற்கான வசதிகளை செய்து கொடுத்தல்.

04. **வருமானமீட்டும் கருத்திட்டங்கள் 50000 வேலைத்திட்டத்தின் எதிர்கால இலக்கு**

| **ஆண்டு** | **கருத்திட்டவாளர்களின் எண்ணிக்கை** |
|---|---|
| 2019 | 200,000 |
| 2020 | 200,000 |
| 2021 | 100,000 |

05. **தகைமை பெறும் தொழில் முயற்சியாளர்கள் (Qualified Entrepreneurs)**

i. சமுர்த்தி வங்கியில் அங்கத்துவத்தினை பெற்றிருத்தல் ( குறைந்த வருமானம் பெறுவோர் உட்பட நலனுதவி பெறுவோர்)

ii. சமுர்த்தி வங்கியின் கடன் கலாச்சாரத்திற்கு அமைய கடன்களைப் பெற்று ஒப்பந்தத்திற்கு அமைய மீளச் செலுத்தியிருத்தல்

iii. சமுர்த்தி வங்கி / வங்கிச்சங்கத்தில் பெற்ற கடன்தொகையினை மீளச்செலுத்தத் தவறியவராகவோ அல்லது அவ்வாறு மீளச் செலுத்தத் தவறிய கடன் தொகைக்கு பிணையாளியாகவோ இல்லாமல் இருப்பதுடன், வேறு வங்கிகள் / நிதி நிறுவனங்களில் கடன் பெற்று மீளச்செலுத்த தவறாதவராக இருத்தல்.

iv. சிறப்பான உடல் ஆரோக்கியத்தடன் 60 வயதை தாண்டாதிருத்தல். 60 வயதை தாண்டிய தொழில் முயற்சியாளர்கள் கடன்களை கோரும் போது கருத்திட்டத்துடன் நேரடியாக தொடர்புபடும் 60 வயதை தாண்டாத அவரது வாழ்க்கைத்துணை / பிள்ளைகளை கூட்டுக்கடனாளியாக இணைத்து கடனைப் பெற்றுக்கொள்ள முடியும்.
பெற்றுக்கொள்ள முடியும். (முதன்மைக் கடனாளி தொழிற்செயற்பாட்டுடன் இணைந்து செயற்பட முடியாத சந்தர்ப்பங்களில் கூட்டுக் கடனாளி கருத்திட்டத்தினை தொடர்ச்சியாக செயற்படுத்திச் செல்வதற்கும் அதேபோல் கடன் தொகையினை மீளச் செலுத்துவதற்கும் உடன்படல் வேண்டும்.)

v. ரூபா 100,000/= க்கு மேற்பட்ட கடன் தொகையினை கோரும் போது ரூபா 100,000/= க்கான வருமானமீட்டும் கருத்திட்டக் கடனை பெற்றுக்கொள்வதற்கு பூரணப்படுத்த வேண்டிய பங்குகள் மற்றும் குழு கணக்கு வைப்பு மீதியினை பேணிச்செல்கின்ற தொழில் முயற்சியாளராக இருத்தல் வேண்டும்.

vi. கடன் திட்டத்தின் பொருட்டு உரிய வங்கியினால் கோரப்படுகின்ற பிணைப்பாதுகாப்புகள் மற்றும் ஏனைய நிபந்தனைகளை பூரணப்படுத்துகின்ற விண்ணப்பதாரியாக இருத்தல் வேண்டும்.

**06. உயர்ந்தபட்ச கடன்தொகை ( Maximum Loan Amount )**

a. உயர்ந்த பட்ச கடன்தொகை ரூபா 500,000/= ஆகும்.
b. தெரிவு செய்யப்படும் கருத்திட்டத்தின் செலவு மதிப்பீட்டுத் தொகையில் கருத்திட்ட உரிமையாளரின் சொத்துப்பங்களிப்பு மற்றும் நிதிப் பங்களிப்பு என்பவற்றை கழித்து மீதித்தொகைக்கு சமுர்த்தி வங்கி கடன் வழங்கும். ( உயர்ந்தபட்ச கடன்தொகை மற்றும் கடன் நிபந்தனைகளுக்கு உட்பட்ட விதத்தில்)

**07. கடன் வழங்கக்கூடிய காரணங்கள் (கடன் பெற்றுக்கொள்ளக் கூடிய கருத்திட்டங்கள்)**

i. விவசாயம் மற்றும் விவசாய உற்பத்திகளின் பெறுமதிசேர் உற்பத்தித் திட்டங்கள்
ii. கைத்தொழில் சார்பான உற்பத்திகள்
iii. மிருகவளர்ப்பு மற்றும் பெறுமதிசேர் கருத்திட்டங்கள்
iv. மீன்பிடி மற்றும் மீன் உற்பத்திகள் சார்பான பெறுமதிசேர் கருத்திட்டங்கள்.
v. தொழிற்பயிற்சி மற்றும் புதிய நுட்பங்கள் சார் கைத்தொழில்கள்
vi. ஏற்றுமதிசார் உற்பத்திக் கருத்திட்டங்கள்
vii. இறக்குமதிப் பதிலீட்டு பொருட்களோடு இணைந்த கருத்திட்டங்கள்
viii. சந்தைப்படுத்தல் மற்றும் சேவை வழங்கல் கருத்திட்டங்கள்

## 08. வருடாந்த வட்டி வீதமும் மீளச்செலுத்தும் காலமும்
## (Annual Interest Rate & Recovery Period)

| தொ. இல | விபரம் | உயர்ந்தபட்ச வருடாந்த வட்டி வீதம் (சமாந்தர வட்டி வீதம்) | மீளச்செலுத்தும் உயர்ந்தபட்ச காலம் (மாதம்) | சலுகைக் காலம் |
|---|---|---|---|---|
| 01 | விவசாய மற்றும் விவசாய உற்பத்திகளின் பெறுமதிசேர் உற்பத்தித் திட்டங்கள் | 8% | 60 | 02வருடங்கள் |
| 02 | கைத்தொழில் சார்பான உற்பத்திகள் | 8% | 60 | 04 மாதங்கள் |
| 03 | மிருக வளர்ப்பு மற்றும் பெறுமதிசேர் கருத்திட்டங்கள் | 8% | 60 | 06 மாதங்கள் |
| 04 | மீன்பிடி மற்றும் மீன்உற்பத்தி சார்பான பெறுமதிசேர் நடவடிக்கைகள் | 8% | 60 | 04 மாதங்கள் |
| 05 | தொழிற்பயிற்சி மற்றும் புதிய நுட்பங்கள் சார் நடவடிக்கைகள் | 8% | 60 | 04 மாதங்கள் |
| 06 | ஏற்றுமதி சார் உற்பத்தித் திட்டங்கள் | 8% | 60 | 04 மாதங்கள் |
| 07 | இறக்குமதி பதிலிட்டு உற்பத்திகளோடு இணைந்த கருத்திட்டங்கள் | 8% | 60 | 04 மாதங்கள் |
| 08 | சந்தைப்படுத்தல் மற்றும் சேவை வழங்கல் கருத்திட்டங்கள் | 8% | 60 | 04 மாதங்கள் |

8.2 கடன் தொகையினை திருப்பிச் செலுத்துவதற்கு சலுகைக் காலத்தினை பெற்றுக் கொள்ளும் போது சலுகைக் காலத்தினுள் மாதாந்த வட்டித் தொகையினையும் செலுத்துதல் வேண்டும்.

8.3 நெற்செய்கை உட்பட போகப்பயிர்ச் செய்கைகள் / பழவகை / சிறு ஏற்றுமதிப் பயிர்கள் உட்பட பயிர்ச்செய்கைகளுக்கு கடனை திருப்பிச் செலுத்துவதற்கான சலுகைக் காலத்தை தீர்மானிப்பதற்கு பிரதேச விவசாய போதனாசிரியர் / சிறு ஏற்றுமதி அபிவிருத்தி உத்தியோகத்தரின் உதவியினை பெற்றுக் கொள்ளல் வேண்டும். அதற்கு பிரதேச கமநலச் சேவை மத்திய நிலையத்தின் சேவையினையும் பெற்றுக்கொள்ள முடியும்.

8.4 மிருகவளர்ப்பு / மீன்பிடித் திட்டங்களுக்கு சலுகைக்காலத்தை தீர்மானிக்கும் போது உரிய நடவடிக்கையுடன் தொடர்புபட்ட சேவையினை வழங்கும் அரச நிறுவனம் அல்லது உரிய உத்தியோகத்தர்களின் ஆலோசனைச் சேவையினை பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

8.5 மாதாந்த கடன் தவணை மற்றும் வட்டித்தொகை கணிப்பீடு என்பன **சகண அருண** கடன் திட்டத்திற்கு வழங்கப்பட்ட ஆலோசனைகளின் பிரகாரம் கணிப்பீடு செய்யப்படல் வேண்டும்.

## 09. பிணைப்பாதுகாப்பு மற்றும் சட்ட ரீதியான ஆவணங்கள் வழங்கலும்
## (Security & Legal document preparation)

9.1 **பிணைப்பாதுகாப்பு**

- சிறுகுழுப் பிணை (ரூபா 250,000/- வரை)
- அசையும் / அசையாச் சொத்துப்பிணை ( ரூபா 250,001/- இலிருந்து ரூபா 500,000/- வரை)
- அரச சேவையிலுள்ள (அரச / அரச சார்புள்ள நிறுவனங்களின் பணியாளர்கள்) இரண்டு நபர்களின் பிணை (ரூபா 250,001/- வில் இருந்து ரூபா 500,000/- வரை )

9.2 ரூபா 100,001/- இருந்து ரூபா 250,000/- வரைக்கும் சிறுகுழுப் பிணைக்குப் பதிலாக அசையும் / அசையாச் சொத்துக்களை அல்லது அரச சேவையாளர்களின் பிணையினையும் பெற்றுக்கொள்ள முடியும்.

9.3 கடன்தொகைக்கு அமைய மேற்படி ஏதாவது ஒரு பிணையினை ெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். சொத்துப்பிணைகளை பெற்றுக்கொள்ளும் போது அச்சொத்து கடனாளிக்கு மாத்திரம் சொந்தமானதாக இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாமல் இருவருக்கு சொந்தமான அல்லது குடும்பச் சொத்துக்களை பிணையாகப் பெற்றுக்கொள்ள முடியாது

9.4 பிணையாக வழங்கும் சொத்தின் நிரந்தர உரிமை வாழ்க்கைத்துணைவருக்கு சொந்தமாக உள்ள சந்தர்ப்பங்களில் கருத்திட்டத்தின் பங்காளராக வாழ்க்கைத் துணைவரை உள்வாங்கிக் கொள்வதற்கு மாத்திரம் இடமளிக்கப்படுகின்றது.

9.5 தனிநபர் பிணைகளை பெற்றுக்கொள்ளும் போது பிணையாளரின் மாதாந்த தேறிய சம்பளம் மற்றும் ஓய்வு பெறவுள்ள காலம் என்பன தொடர்பாக திணைக்கள சட்டதிட்டங்களுக்கு அமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். கடனாளி கடன்தொகையினை மீளச் செலுத்தத் தவறும் சந்தர்ப்பங்களில் பிணையாளரிடம் இருந்து அதனை அறவீடு செய்வதற்கு தேவையான ஆவணங்களை உரிய நிறுவனத்திற்கு அனுப்பிவைப்பதுடன் அவற்றை பாதுகாப்பான முறையில் கோவைசெய்து வைப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

9.6 காணி, கட்டிடம் என்பவற்றை பிணையாக பெற்றுக்கொள்வதற்கு முன்னர் உள்ளூராட்சி நிறுவனங்களில் இருந்து பெற்றுக்கொள்ள வேண்டிய ஆவணங்களையும், காணியின் உரிமை தொடர்பான சட்டரீதியான தன்மையினை வெளிப்படுத்தும் ஆவணங்களையும் கடனாளி ஒப்படைத்தல் வேண்டும்.

9.7 ஏற்றுக்கொள்ளக்கூடிய சட்டத்தரணி ஒருவர் ஊடாக உரிய முறையில் அவ் ஆவணங்கள் பரிசீலணை செய்யப்பட்டு அதன் அடகுப்பொறுப்பினை சமுர்த்தி வங்கியின் பெயருக்கு மாற்றிக்கொள்ளல் வேண்டும்.

9.8 பிணைப் பாதுகாப்பு உட்பட ஏனைய ஆவணங்கள் அனைத்தையும் ஒப்படைத்தல் மற்றும் அது தொடர்பாக ஏற்படுகின்ற செலவுகள் என்பன கடனாளியினால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

9.9 கொள்வனவு செய்யப்படவுள்ள புதிய வாகனத்தை பிணையாக பெற்றுக்கொள்ளவிருப்பின் வங்கியின் பெயரில் அதன் பூரண உரிமையினை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

9.10 வாகனத்திற்குரிய காப்புறுதிச்சான்றிதழ், வாகன வருமான உத்தரவுப்பத்திரம் என்பவற்றை உரியமுறையில் கடனாளி பெற்றுக்கொள்ளல் வேண்டும். இன்நடவடிக்கை உரிய காலத்தில் மேற்கொள்ளப்படுகின்றதா என்பதை வங்கி ஆராய்ந்து பார்த்தல் வேண்டும்.

## 10. கடன் காப்பீடு / கூட்டுக்காப்பீட்டு வேலைத்திட்டத்திற்கான பங்களிப்பு

10.1 கடன் காப்பீட்டு வேலைத்திட்டத்திற்கு பங்களிப்பு செய்தல்.
தற்போது நடைமுறையில் உள்ள நெறிப்படுத்தல் ஆலோசனைகளின் பிரகாரம் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

10.2 கடன்காப்பீட்டு வேலைத்திட்டம் வழமைபோல் வங்கிச்சங்கத்தினூடாக செயற்படுத்திச் செல்லப்படல் வேண்டும். அந்தவகையில் மாதாந்தம் சகல பங்களிப்புத் தொகையினையும் வங்கிச் சங்கத்திற்கு அனுப்பிவைத்தல் வேண்டும். நஸ்டயீடுகள் கோரப்படும் சந்தர்ப்பங்களில் உரிய நெறிப்படுத்தல் ஆலோசனைகளுக்கு அமைய நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

10.3 கூட்டுக்காப்பீட்டு பங்களிப்பு
தற்போது நடைமுறையில் உள்ள நெறிப்படுத்தல் ஆலோசனைகள் மாற்றம் ஏதும் இன்றி செல்லுபடியாகும்.

## 11. முன்வைக்க வேண்டிய ஆவணங்கள் (Present Documents)

11.1 கடன் விண்ணப்பப்படிவம் (தற்போது நடைமுறையிலுள்ள விண்ணப்பப்படிவம்)

11.2 ஒப்பந்தம் மற்றும் பிணை உறுதிமொழி (தற்போது நடைமுறையிலுள்ள மாதிரிப்படிவம்)

## 12. கருத்திட்டம் மற்றும் கடன்தொகைக்கு அனுமதி வழங்கலும் கடன் தொகையினை விடுவித்தலும் (Project Approve & Disbursement)

12.1 தகைமையுள்ள கடனாளியினால் உரிய முறையில் தயாரிக்கப்பட்ட கடன் விண்ணப்பப் படிவங்களை உரிய சிபாரிசுடன் வங்கிக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

12.2 வங்கி உரிய கடன் கோரிக்கை தொடர்பாக களஆய்வுகளை மேற்கொண்டு கருத்திட்டத்தின் சாத்தியத் தன்மை தொடர்பாக பரிசீலணை செய்தல் வேண்டும்.

12.3 சமுர்த்தி வங்கி தகைமையுள்ள கடன் விண்ணப்பங்களை கருத்திட்ட கண்காணிப்பின் பொருட்டு வங்கிச்சங்கத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

12.4 வங்கிச்சங்க முகாமையாளரினால் அல்லது கருத்திட்ட முகாமையாளரினால் கருத்திட்டத்தின் சாத்தியவளத்தன்மை கண்காணிக்கப்பட்டு கருத்திட்டத்தின் சாத்தியவளம் மற்றும் கடன்தொகையின் அளவு, கடன்தொகையினை பயன்படுத்தவுள்ள விதம் தொடர்பான முன்மொழிவுகள் மற்றும் சிபாரிசுகளை வங்கிக்கு வழங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

12.5 சமுர்த்தி வங்கிச்சங்கத்தினால் சாத்தியப்பாடு வழங்கப்படும் கருத்திட்டங்களுக்கான கடன் விண்ணப்பப்படிவங்களை உரிய சமுர்த்தி வங்கி கட்டுப்பாட்டுச்சபைக்கு முன்வைத்து அனுமதியினை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

## 13. கடன்தொகையினை விடுவித்தல் மற்றும் அறவீடு செய்தல் (Disbursement & Recovery)

13.1 கடன் தொகையினை விடுவித்தல்

| | |
|---|---|
| **பெற்றுக்கொள்ள வேண்டிய "சமுர்த்தி தனாபிமாணி" கடன் கணக்கு** | **- பற்று** |
| **அங்கத்தவர் வைப்புக்கணக்கு** | **- வரவு** |

( பெற்றுக்கொள்ள வேண்டிய ''சமுர்த்தி தனாபிமாணி'' கடன் கணக்கின் பொருட்டு **குறியீட்டு இலக்கம் 3123** இல் பொதுப்பேரேட்டில் புதியகணக்கொன்றை ஆரம்பித்துக்கொள்ளல் வேண்டும்.)

13.2 அனுமதிக்கப்பட்ட கடன்தொகையினை ஒரே தடவையில் அல்லது பகுதியளவில் கருத்திட்டத்தின் தன்மை, செயற்பாடுகளுக்கு அமைய விடுவிக்க முடியும். மேலும் கணக்குடையோரின் கோரிக்கைக்கு அமைய நிறுவனங்களுக்கு காசோலை வழங்குவதற்கும் இடமளிக்கப்படுகின்றது.

13.3 மாதாந்தம் கடன் தவணையும் வட்டியினையும் அறவீடு செய்தல்

அங்கத்தவர் வைப்புக் கணக்கு - பற்று
பெற்றுக்கொள்ள வேண்டிய ''சமுர்த்தி தனாபிமாணி'' கடன் கணக்கு - வரவு (கடன் தவணை)
பெற்ற வட்டி – கொடுத்த கடன் கணக்கு – வரவு ( வட்டி வருமானம் மற்றும் தாமதக் கட்டணம்)

13.4 இக்கடன் திட்டத்தின் கீழ் கூடுதல் சாத்தியப்பாடுள்ள திட்டங்களுக்கு மாத்திரமே கடன்தொகை வழங்கப்படுவதுடன் தவணை தவறல்∴ காலம் கடந்த கடனாகுதல் என்பன குறைவாகவே காணப்படும். இருந்தும் விஷேட காரணங்களினால் கடன் செலுத்தத்த தவறும் சந்தர்ப்பங்களில் கீழ்வருமாறு கணக்குப்பதிவுகளை மேற்கொள்ள இடமளிக்கப்படுகின்றது.

அறவிடமுடியாக் கடன் கணக்கு - ''சமுர்த்தி தனாபிமாணி''கடன் கணக்கு- பற்று
(குறியீட்டு இலக்கம் -3223)
பெற்றுக்கொள்ள வேண்டிய - ''சமுர்த்தி தனாபிமாணி''கடன் கணக்கு- வரவு

(ஏனைய பதிவுகளை ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள ஆலோசணைகளுக்கு அமைய பொதுப் பேரேட்டில் பதிய நடவடிக்கை எடுத்தல் வேண்டும்)

13.5 அறவிடமுடியாக் கடனை அறவீடு செய்தல் மற்றும் பெற்ற வருமானக்கணக்கிற்கு சீர்செய்வதற்கான கணக்குப்பதிவுகளை மேற்கொள்ளல் . இதுவரை வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

13.6 மாதாந்த கடன் முன்னேற்றங்களை அனுப்புதல். ஏனைய கடன் வேலைத்திட்டங்களுடன் அதற்காக பயன்படுத்தும் படிவத்தில் தயாரித்து மிக விரைவாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

13.7 இக்கடன் வேலைத்திட்டத்தின் கீழ் கடன்தொகையினை அனுமதித்தல் , விடுவித்தல் அறவீடு செய்தல் காலம் கடந்த கடன் , அறவிடமுடியாக்கடன் ஒதுக்கம் , அறவிடமுடியாக்கடன் மீள்அறவீடு, உட்பட எல்லா விடயங்களுக்கும் பாவிக்கப்பட வேண்டிய பதிவேடுகள் , கட்டுப்பாட்டு பேரேடுகள் , ஆள்சார் பேரேடு , கடன் அட்டை உட்பட சகல ஆவணங்களும் தற்போது பாவனையில் உள்ள படிவங்களை பாவித்து தயாரிக்கப்படல் வேண்டும்.

14. ''சமுர்த்தி தனாபிமாணி'' கடன் திட்டத்தின் கீழ் கடன் தொகையினை வழங்குவதற்கு தொழில் முயற்சியாளர்களை தெரிவு செய்யும் போது திறமையான தொழில் முயற்சியாளர்களை இக் கருத்திட்டத்திற்கு தெரிவு செய்து திட்டங்களை ஆரம்பிப்பதுடன் பின்னூட்டல்களை மேற்கொள்ளும் போது பிரிவுக்குப் பொறுப்பான சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் , வங்கி முகாமையாளர் , கருத்திட்ட முகாமையாளர் மற்றும் வங்கிச்சங்க முகாமையாளர் மூலம் பொறுப்புடனும் மற்றும் நேரடிக் கண்காணிப்புடனும் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

15. மேலும் வருமானமீட்டும் 50000 கருத்திட்டங்களை தொடர்ச்சியாக செயற்படுத்த வேண்டிய விதம் தொடர்பாக பொருளாதார வலுவூட்டல் மற்றும் கிராமிய அபிவிருத்தி பிரிவுகள் மூலம் வெளியிடப்படும் சுற்றுநிருப ஆலோசனைகளையும் பின்பற்றுதல் வேண்டும்.

16. இக்கடன் திட்டத்தினை செயற்படுத்தும் போது இங்கு உள்ளடக்கப்படாத விடயங்களுக்கு ஏற்கனவே வெளியிடப்பட்டு நடைமுறையில் உள்ள கடன் தொடர்பான நெறிப்படுத்தல்களில் குறிப்பிட்டுள்ள ஆலோசனைகள் செல்லுபடியாகும்.

**S.E.R.D.M.S.P பண்டார,**
பணிப்பாளர் நாயகம்.

**பிரதிகள்** :-

| | | |
|---|---|---|
| 01. செயலாளர், ஆரம்ப கைத்தொழில் மற்றும் சமூகவலுவூட்டல் அமைச்சு – | | தகவலுக்காக |
| 02. சகல மாவட்ட செயலாளர்களுக்கும். | - | தகவலுக்காக |
| 03. பிரதான கணக்காளர் , சமு.அபி.திணைக்களம் - | - | தகவலுக்காக |
| 04. பிரதான உள்ளக கணக்காய்வாளர் , சமு.அபி.திணைக்களம் | - | தகவலுக்காக |
| 05. சகல மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர்களுக்கும் | - | தகவலுக்காகவும், உ.ந.பொருட்டும். |
| 06. சுகல பிரதேச செயலாளர்களுக்கும் | - | தகவலுக்காகவும், உ.ந.பொருட்டும். |
| 07. சகல நிறைவேற்று சபை தலைவர்களுக்கும் வங்கிச்சங்கம் | - | தகவலுக்காக |
| 08. சகல கட்டுப்பாட்டுசபை தலைவர்களுக்கும் - சமுர்த்தி வங்கி | - | தகவலுக்காக |

TRANSLATED BY - I ALIYAR